
# கோதா ஸ்துதி

"நயம்" என்பது கவிகளுக்குக் கைவந்த கலை. அது அவர்களுக்கு இயல்பாகவே கிடைத்த வரப் பிரசாதம். அதிலும் இறைவன் அருள் பெற்ற கவிகள் என்றால் கேட்கவும் வேண்டுமோ?

எம்பெருமான் அருள் பெற்ற ஸ்வாமி தேசிகன் "பெரியாழ்வார் கண்டெடுத்த பெண் பிள்ளை"யான ஆண்டாளைப் பற்றித் தம் கோதாஸ்துதியில் பாடும் போது, அவள் அரங்கனுக்குத் தான் சூடிக் கொடுத்த 'பூமாலை'யின் மலர்களின் மணத்தினால் மதி மயங்கிய வண்டுகள் போன்று நாமும் அவர் கோதை நாச்சியார் மீது தொடுத்த 'பாமாலை'யில் வார்த்தைகள் என்ற மலர்களை 'நயம்' என்ற நூல் கொண்டு தொடுத்து அதன் மணத்தில் நம்மையும் மதி மயங்கச் செய்து விடுகிறார்.

"பெரியாழ்வாரின் குலத்துதித்த கற்பகக் கொடியாகவும், அழகிய மணவாளன் என்கிற சந்தனமரத்தைத் தழுவிப் படர்ந்த கொடியாகவும், பூமி பிராட்டியின் அவதாரமாகவும், கருணை என்னும் குணத்தினால் மற்றொரு கமலையாகவும் இருப்பவளே! உன்னை வேறு புகலின்றிச் சரணடைகிறேன்" என்றவர் மேல்வரும் பாடல்களில் "உன் மகிமையோ வார்த்தைகளுக்கு எட்டாதது. இதை நான் நன்கறிவேன். இருப்பினும் உன் குணங்கள் என் மௌனத்தையும் கலைத்து உம்மைப் பற்றிப் பேச வைத்து விட்டதே!" என்கிறார்.



"என்னை ஆண்டாளே! உன் கணவனான எம்பிரானின் மனத்தைக் கவரும் உன் திருவடியில் அணிந்த சலங்கைகளின் கலகல ஒலி போன்று உன்னைப் பற்றிய துதிகள் என் நாவிலிருந்து வெளிவரும்படி நீயே அருள வேண்டும்.

கோதையே! உன் (சரஸ்வதி) வாக்கு கண்ணன் சம்பந்தம் கொண்டதனால் யமுனையும் ஆகிறது. அதன் பல துறைகளிலும் இறங்கி அனுபவித்தவர்கள் உன் அருளால் மஹாகவிகளாகி, தேன் சிந்தும் திவ்ய வாக்குகள் படைத்தவர்களாக ஆகின்றனர். உன் தலையில் சூடிக் கொடுத்த பூமாலைகளாலும் வீணாகானம் போன்ற உன் பாமாலைகளாலும், திருமாலை நீ வசப் படுத்தியதாலன்றோ உன் குழந்தையான எம் போன்றோருக்கும் அவனருள் அநாயாஸமாகக் கிடைக்கிறது?


நீ இயற்கையில் கோதா(வரி) ஆயினும் உதடுகளில் சோணையாகிறாய். (சோணை - சிவப்பு- சோண பத்ரா என்ற நதி) சொற்பெருக்கில் ஸரஸ்வதி (நதி) ஆகிறாய். திவ்யமான ச்ருங்கார ரசங்களினால் (ஜலங்களினால்) நீ சுயம் விரஜை (விரஜா நதி - குற்றமற்றவள்) ஆகிறாய். உன் கணவனுக்கு நர்மதை (இன்பம் தருபவள் - நர்மதை நதி) யாகவும் ஆகிறாய். உன் உயர்ந்த மார்பகங்களால் துங்கபத்திரை (புடைத்துபவள்) ஆகிறாய்.

உன் உருவான பூமியின் காது எனப்படும் வன்மீகத்திலிருந்து (புற்றி

லிருந்து) வால்மீகி தோன்றினார். அவரை உலகம் 'ஆதிகவி' என்று கொண்டாடுகிறது. உன் காதிலிருந்து பிறந்தவருக்கே இவ்வளவு பெருமைகள் என்றால், உன் முகத் தாமரையிலிருந்து தேனருவி போன்று தோன்றிய பிரபந்தங்கள் கொண்டாடப்படுவதில் வியப்பென்ன இருக்கிறது?

சந்திரா பார்த்தசார

தாயே! தாபத்தைப் போக்கும் சக்தி வாய்ந்த பிராட்டியுடன் பிறந்த மற்றொரு சந்திர பிம்பமாக உன்னைப் பெரியவர்கள் வர்ணிக்கிறார்கள். அது ஏனென்றால் உங்கள் இருவருக்குமே 'விஷ்ணு சித்த' (பெரியாழ்வாரின் இயற்பெயர் விஷ்ணு சித்தர் - விஷ்ணுவின் மனத்தில் குடி கொண்டவர்) சம்பந்தம் உண்டு. எம் பெருமான் துதிவசனத்திற்கு வசப்படுபவன். அப்படி இருந்தும் அவன் பெரியாழ்வார் எம்பெருமானைப் பற்றி பல்லாண்டு பாடிய போதும் த்ராதிருந்து, உன் கூந்தலில் சூடிக் களைந்த மாலைகளைத் தனக்குச் சமர்ப்பித்த பின்னரே 'பெரியாழ்வார்' என்ற பட்டத்தைத் தந்தான். பல புண்ணியங்களின் பயனாக நீ இங்கு அவதரித்ததால் இந்த தக்ஷிண தேசம் ஸர்வோத்தர (எல்லாவற்றிற்கும் மேம்பட்ட - வடக்கான) தேசமாயிற்று. அதனால்தான் ஸ்ரீரங்கபதியான பகவான் இந்தத் தெற்கு திக்கின் மேல் அலாதியான கடாட்சங்களை அருளுகிறான்.



கோதையே! உன்பெயரைத் தன்னுள் தாங்கியதாலோ என்னவோ கோதாவரி நதி இன்றும் இந்த பாரதத்தைத் தன் நீரால் நனைத்துப் பாவனமாக்குகிறது. அதனாலேயே கங்கை போன்ற நதிகளும், தங்கள் பாவம் தொலைய இதில் குறிப்பிட்ட சமயங்களில் வந்து கலந்து புண்ணிய நதிகளாக ஆகின்றனவோ?

நீ சூடிக் களைந்த மாலைகள் எம்பெருமான் முடி மீது மணக்க, அவனது திருமார்பில் துலங்கும் மாலைகளை விட்டு வண்டினங்கள் அங்கிருந்து அவன் திருமுடிக்குச் சென்று, ஒன்றை ஒன்று முட்டித் தள்ளி வட்டமிட்டு, மயில் தோகையாலான குடை போல் அவன் திருமுடிக்கு நிழல் தருகின்றன.

நீ சூடிக் களைந்த மாலையை (இன்று மணந்த இளையாளை) எம்பெருமான் தன் மீது வைத்துக் கொண்டாடி, வைஜெயந்தி (மூத்தாளை - முன்பே அணிந்திருந்த) மாலையை மணம் (மகிழ்ச்சி) உள்ளதாயினும் மனத்தை(மார்பை)த் தொடுவதாயினும் இராகம் (ஆசை - சிவப்பு) உடையதாயினும் குணம் (நூல்) கொண்டதாயினும், கீழே (மார்பில்) தள்ளி வைத்து விட்டான்.

தாயே! எம்பெருமாள் திரு

நாபியில் உலகமாகப் பரிணமிக்கும் ஆற்றலுடைய கமல மலர் மணக்கிறது. திருமார்பில் மஹாலக்ஷ்மியின் குங்கும மணம் நிறைந்திருக்கிறது. இவ்வளவு மணங்கள் இருந்தும் அவன் நீ சூடிக் கொடுத்த மாலைகளின் மணத்தையே விரும்பித் தன் தலையில் ஏற்றான், இல்லையா?

நீ மேலே சாத்திய பட்டையும், உன் கூந்தலினால் வாசனை ஊட்டப் பெற்ற மாலையையும் தன் தலையில் ஏற்றதனால், எம்பெருமான் சர்வ லோக சாம்ராஜ்யத்தின் அதிகாரியாகப் பரிவட்டம் கட்டி மாலை போட்டுப் பட்டம் சூட்டப் பெற்றார் போலும்! நீயும் ரங்கராஜனும் ஒருவருக்கொருவர் மாலைகளை மாற்றிக் கொள்ளும்போது பக்கத்தில் இருந்த மந்த புத்தி கொண்ட சிலர், உங்களில் ஒருவரை உயர்த்தியும், மற்றொருவரைத் தாழ்த்தியும் பேசினர்.

கோதையே! ஒருபுறம் பச்சைப் பசும்புல் போன்ற உன் திருமேனியின் நிறத்தினாலும், மறுபுறம் மஞ்சள் கோரோசனை போன்ற பெரிய பிராட்டியின் தேக நிறத்தாலும், எம் பெருமானின் கரிய திருமேனி மயில் கழுத்தின் சாயலைப் பெற்று, மங்கலமாகப் பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறது.

உன் உருவான பூமி தேவி, பெரிய பிராட்டி ஆகியோருடன் கூடிய நாதனை, எம் பெருமானை, பூஜிக்கத் தக்கவனை, மந்திர புஷ்பங்களாலும், பல நியமங்களாலும், பூஜித்து மநு, மாந்தாதா போன்ற அரசர்கள் தங்கள் சாம்ராஜ்யத்தை நீண்ட காலம் அனுபவித்தார்கள்.

சரணாகதியென்று வந்தவர்களை அவர்கள் பல பாபங்களைச் செய்தவர்களாக இருப்பினும் பெரிய பிராட்டியார், பெருமாளிடம் அவர்களையும் ரட்சித்தருள வேண்டுமென்று பரிந்துரை செய்யும் போது, அங்கு எம்பிரானருகில் நீ ஒருத்தி இருப்பதனால் தான் அந்தச் செயல் அநுகூலமாகிறது. இல்லையெனில் எம்பெருமான் முகம் மாறியிருப்பான்.

நீங்கள் நுகரும் இன்ப ரசத்திற்கேற்ப உண்டாகும் உன் புருவ நெளிப்பு, பக்தர்களின் பாபங்களை பகவானின் கவனத்திற்கு வராதவாறு ஒளித்து, அவரவர் விதிப்படி பலன் தருகின்ற இயல்புடைய எம்பிரானின் அத்தகைய மனப் போக்கையும் அறவே மாற்றி நமக்கு நன்மை பயக்கிறது.

பெரிய பிராட்டி என்னும் மின்னற்கொடி படர்ந்த கிருஷ்ண மேகமான ரங்கராஜன் கருணை மழை பொழிய, அதனால் துர்கதியைத் தவிர்த்து அமுத வெள்ளமாகப் பெருகியோடும் உன்னைப் பெரியவர்கள் பருகி (சேவித்து) தம் தாபம் தீருகின்றனர்.

ஒரு தாய், தன் குழந்தை பால் பருகும்போது பல்லால் கடித்தாலும், பொறுத்துக் கொள்வது போல பாபங்கள் பல புரிந்தவனாயினும் என்னிடம் கருணை காட்டி நீ ரக்ஷித்தாயானால் அது தாயான உனக்குத் தகும்! தகும்!

ஆண்டாள் திருவடிகளே சரணம்! ●